# ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலைய நடைமேம்பாலம்

## முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார்



சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் முன்புறமுள்ள ஜிஎஸ்டி சாலையில் கட்டப்பட்டுள்ள நடை மேம்பாலத்தை சென்னை தலைமை செயலகத்தில் செவ்வாய்க்கிழமை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்த முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, உடன், துணை முதல்வர் ஓ.பன்னீசெல்வம், அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், எம்.சி.சம்பத், தலைமைச் செயலர் க.சண்முகம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர் ராஜேஷ் லக்கானி, செயலர் கார்த்திகேயன் உள்ளிட்டோர்.

**சென்னை, பிப். 4:** சென்னை ஆலந்தூரில் உள்ள மெட்ரோ ரயில் நிலையம் அருகே அமைக்கப்பட்ட நடை மேம்பாலத்தை, முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி மூலமாக செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெருகி வரும் வாகன போக்குவரத்தால் ஆயிரக்கணக்கான பாதசாரிகள் சாலையை பாதுகாப்பாகவும், எளிதாகவும் கடக்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், முக்கிய சாலைகளில் நடைமேம்பாலங்கள் தேவை என தமிழக அரசால் கண்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள ஆலந்தூரில் நடைமேம்பாலம் அமைக்கப்படும் என்று சட்டப் பேரவையில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

**ஆலந்தூர் மெட்ரோ ரயில்:** சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இரண்டு வழித் தடங்களும் உயர் மட்ட நிலையில் ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் சந்திக்கின்றன. இங்கு ஒருவழித் தடத்தில் இருந்து மற்றொரு வழித்தடத்துக்கு எளிதாக மாறிச் செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மெட்ரோ ரயில் நிலையத்துக்கு முன்புறம் அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள ஜி.எஸ்.டி. சாலையின் எதிர்புறத்தில் ஆசர்கானா பேருந்து நிறுத்தத்துக்கு பயணிகளும், பொது மக்களும் பாதுகாப்பாகச் சென்றடைவதற்கு நடை மேம்பாலம் அவசியத் தேவையாகக் கருதப்பட்டது. அதன்படி, மெட்ரோ ரயில் நிலையம் முன்புறம் ஜி.எஸ்.டி. சாலையில், நடைமேம்பாலம் அமைக்கும் பணிக்காக, பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் ரூ.9.07 கோடி செலவில் நடைமேம்பாலம் கட்டப்பட்டது.

இந்தப் பாலத்தை, முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

**என்னென்ன வசதிகள்:** புதிய நடைமேம்பாலமானது 55.41 நீளமும், 6.41 மீட்டர் அகலமும் கொண்டது. மேலும், பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு மின்தூக்கிகள், நான்கு நகரும் படிக்கட்டுகள், கண்காணிப்பு கேமராக்கள் உள்ளிட்ட வசதிகள் உள்ளன. மேலும், நடைபாதையின் அனைத்துபகுதிகளிலும் எல்.இ.டி., மின்விளக்குகள், மாற்றுத் திறனாளிகள் நடைபாதையில் இருந்து மின் தூக்கிக்குச் செல்வதற்கு வசதியாக சாய்தளம் மற்றும் நடைபாதையில் துருப்பிடிக்காத எஃகினால் ஆன கைப்பிடிகள் போன்ற வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், எம்.சி.சம்பத், தலைமைச் செயலாளர் க.சண்முகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.